உ

RG 29

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பாடியென வழங்கும்

திருவலிதாயப் புராணம்.

(கத்திய ரூபம்.)

இஃது

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தர முதலியாரால்

இயற்றப்பட்டு,

ஷை தேவாலய தருமகர்த்தராகிய

ப. தணிகாசல முதலியாரவர்களால்

சென்னை

தாம்ஸன் கம்பெனி அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விகாரிஸு ஆடிமீ.

1899.

சிவமயம்.

சிறப்புக்கவி.

திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை யாதீனம்

திருப்பூவனூர் வாசம்

ஸ்ரீமத். சுப்பிரமணியத்தம்பிரான் சுவாமிகள்

அருளிச்செய்தது.

உலகனைத்தும் புகழ்தொண்டை மண்டலமா தினிலக
வொண்பதியாம வலிகா யத்தி
யுயரியவா ரியபுரா ணநதனைப்பாற கடலினிடை
யுறழமுதத் தமிழி லாக்கி
நலங்கொளுநல லன்பரெலாந தெவிட்டாதிங் கேயுண்ண
நயமொழியி னளித்திட் டானல்
நம்வாயி லார்நாய னாமரபி லவதரிதத
நறகீர்த்தி வளமேவ ளாளன
லமருவு மிலக்கணவி லக்கியநூல பலதோநத
மாணாக்கர் சூழ வாழ்வோன
வைதீக சைவசித் தாநதசாத திரத்துண்மை
மகிழுலகில் வழங்கு சீலன
கலைநிறைபு மகச்சமயந த பிததுப் புறச்சமயங்
கால்வாரச் செயுமொா தீரன
கவின்பூவை யவதானங் கலியாண சுந்தரநற்
கவிராஜ சிங்க மாதோ.

உ

சிவமயம்.

சருக்க வட்டவணை.

௧. நைமிசாரணியச் சருக்கம்.

௨. பரத்துவாசர் பூசித்த சருக்கம்.

௩. தேவகுரு காம நாசச்சருக்கம்.

௪. கேசவன பாவ நாசச்சருக்கம்.

௫. அனுமா ரபராத மன்னிப்புச்சருக்கம்.

௬. இராமர் தரிசித்த சருக்கம்.

௭. அகத்திய ரத்தி யொழிந்த சருக்கம்.

௮. பிரமன் முத்தியடைந்த சருக்கம்.

௯. திருவிழாச் சருக்கம்.

௧௦. தீர்த்த மகிமைச் சருக்கம்.

முற்றிற்று.

சிவமயம்.

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்

அருளிச்செய்த

திருவலிதாயத் தேவாரம்.

பண் - நட்டபாடை.

திருச்சிற்றம்பலம்.

பத்தரோடு பலரும் பொலியம் மலரங்கைப் புனறூவி
ஒத்தசொல்லி யுலகத்தவர்தாந் தொழுதேத்தவுயர் சென்னி
மத்தம்வைத்த பெருமான் பிரியா துறைகின்ற வலிதாயம்
சித்தம் வைத்த வடியாரவர் மேலடையாமற்றிடர் நோயே.

படையிலங்கு கரமெட்டுடை யான்படிறாகக் கனலேந்திக், கடையிலங்கு மனையிற் பலிகொண்டுணுங்கள் வன்னுறைகோயின், மடையிலங்கு பொழிலின்னிழல் வாய்மது வீசும் வலிதாய, மடைய நின்றவடி யார்க் கடையாவினை யல்லற்றுயா தானே. (௨)

ஐயனெய்யனணியன் பிணியில்லவரென்றுந் தொழுதேத்தச், செய்யன் வெய்யபடை யேந்தவல்லான் றிருமாதோடுறை கோயில், வையம் வந்து பணியப்பிணி ... துயர்கின்ற

வலிதாயம், உய்யும் வண்ண நினைமினனினைந்தால் வினைதீருந் நலமாமே. (௫)

ஒற்றையேற துடையானடமாடி யோர்பூதப்படை சூழப், புறறிளுக மளையார்த் துழல்கின்ற வெம்பெம்மான்மட வாளோ, டுறறகோயிலுலகத் தொளிமல்கிட வுள்கும் வலிதாயம, பற்றிவாழும மதுவே சரணுவது பாடும்மடியார்க்கே. ()

புநதியொன்றி நினைவார் வினையாயின தீரப்பொருளாய அநதியன்ன தொரு பேரொளியானமா கோயிலய லெங்கும் மநதிவநது கடுவன்னொடுங் கூடி வணங்கும வலிதாயம சிநதியாதவவர் தம்மடும வெநதுயர் தீர்த லெளிதன்றே. (௬)

ஊனியன்ற தலையிற் பலிகொண் டுலகத்துள்ளவரேத்தக் கானியன்ற கரியின்னுரி போர்த்துழல்கள் வனசடைதன்மேல் வானியன்ற பிறைவைத்த வெம்மாதி மகிழும் வலிதாயம தேனியன்ற நறுமாமலர் கொண்டு நின்றேத்தத் தெளிவாமே.

கண்ணிறைந்த விழியினனழலால் வருகாமன்னுயிர் வீட்டிப் பெண்ணிறைந்த வொருபான் மகிழ் வெய்திய பெமமானுறை கோயில, மண்ணிறைநத புகழ் கொண்டடியார்கள் வணங் கும் வலிதாயத், துண்ணிறைநத பெருமான் கழலேத்த நம் முண்மைக் கதியாமே. (எ)

கடலினஞ்ச மமுதுண்டிமையோர் தொழுதேத்த நடமாடி அடலிலங்கை ... ாயன வலிசெற்றருளம் மாவைர் கோயில்

மடலிலங்குகமுகின் பலவின் மதுவிம்மும் வலிதாயம்
உடலிலங்கு முயிருள்ளளவுந் தொழவுள்ளத்துயர் போமே.()

பெரியமேரு வரையே சிலையாமலைவுற்று ரெயின மூன்றும்
எரியவெய்த வொருவன்னிருவர்க்கறி வொண்ணுவடிவாகும்
எரியதாகி யுறவோங்கி யவன் வலிதாயந் தொழுதேத்த
உரியராகவுடையார் பெரியாரெனவுள் குமுமல கோரே. (௯)

ஆசியார மொழியார மண்சாக்கியரல்லாதவர் கூடி [ல்
ஏசியீரமிலராய் மொழிசெய்தவர் சொலைப பொருளென்னே
வாசிதீரவடியார்க்கருள் செய்துவளர்ந்தான் வலிதாயம்
பேசுமார்வ முடையாரடியாரெனப் பேணும் பெரியோரே.

வண்டுவைகும் மணமல்கிய சோலைவளரும் வலிதாயத்
தண்டவாணனடியுள் குதலாலருண்மாலைத் தமிழாகக்
கண்டலவைகு கடற்காழியுண் ஞானசம்பந்தன் றமிழ்பத்தும்
கொண்டுவைகியிசை பாடவல்லார் குளிரவானத்துயர் வாரே.

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பாடியெனவழங்கும்

திருவலிதாயப் புராணம்.

காப்பு.

வரசித்தி விநாயகர்.

அரசித்திசாமுகமனைத்தினிலுமேசெல்வைபவருக்கப்
பரசித்திவாய்ந்தொளிரவமரர்நணிபரிந்தேத்திப்பாடியாட
வரசித்திமிகக்கஞறும்பஃறளிசூழ்வலிதாயத்தமர்ந்தஞான
வரசித்திவிநாயகனையெந்நாளுமேபணிந்துவந்திப்போமால்.

வலிதாயநாதர்.

பொலிதாயபூங்கொன்றைநன்னீழலமர்ந்தருளிப்புகழ்மலிந்த, பலிதாயமேனிதிகழ்மெய்யன்பர்பணியேற்றுப்பண்டைநாளின், வலிதாயவினையகற்றிநினைந்தவையெலாமருளிமன்னிவாழும், வலிதாயநாதனிருசெங்கமலப்பொற்பாதம்வாழ்த்துவோமால்,

தாயம்மை.

வேயம்மையுறழ்குவவுத்தோளினிருபாங்கரினும்விளங்கநின்று, பாயம்மையறலபருகுமலைமகள்வெண்ணலர்மகள்பண்பகர்ந்திறைஞ்ச, வாயம்மைமலர்ந்தருளா தருளையிருகட்கணிப்பால்வழங்கிக்காக்குந், தாயம்மையினைப்பரவியும்மைவினையிம்மையினிறசாடிவாழ்வாம்.

நைமிசாரணியச் சருக்கம்.

செந்தாமரைப்பூம் பொகுட்டில் அரசு வீற்றிருக்கும் சிருட்டி கர்த்தாவாகிய பிரமதேவனிடத்திற் சன்மார்க்கமாகிய சைவசமயாசார நெறியினரான சில முனிவர்கள் பூர்வ காலத்திற் சென்று வணங்கித் தாங்கள் தவஞ்செய்தற்குத் தக்க இடந் தெரிவிக்க வேண்டு மென்று வேண்டிக் கொண்டனர். நான்முகக்கடவுள் ஒரு தருப்பையினை நேமியாக (சக்கரமாக) வளைத்து உருட்டிவிட, அதன்பின்னே ஞானத்திற் சிறந்த முனிவர்கள் சென்று அந்த நேமிதங்கிய நைமிசவனத்தி லிருந்துகொண்டு அனந்த கல்யாணசுந்தர குண சம்பன்னரான சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்து கொண்டிருந்தனர். அக்காலத்தில் அவ்விடத்தில் வைதிக சிகாமணியாகிய வியாசரது மாணாக்கர் சூதமாமுனிவர் நாவினுக் கருங்கலமாகிய நமசிவய மந்திரத்தை யுச்சரித்து

கொண்டே வரக்கண்டு, பரமசந்தோஷத்தா லெதிர்கொண்டு சென்றழைத்துவந்து, ஓராதனத்தின்மே லெழுந்தருளச் செய்து அர்க்கியபாத்தியம் ஆசமனீய முதலியதந்து சமீபத்தி லிருந்து விண்ணப்பஞ் செய்வாராயினர். சிவபக்த சிரோன மணியே! தேவர்கள் எப்போதும் அமுதத்தினையே விரும்புகின்றார்கள்; அதுபோல் நாங்கள் எப்போதுஞ் சிவசரித்திரத் திலேயே ஆவலுடையவர்களா யிருக்கின்றேம். ஆதலின் தேவரீர் முனனொருகாலத்தில் தேவாதி தேவனாகிய சிவ பெருமானது தலமான்மியங்களைத் திருவாய்மலர்நதருளிய போது இரத்தினவனத்திற்குச் * சமீபத்தில், அன்பர்க்கு அகண்டசெல்வத்தினை யளித்தருளும் 'திருவலிதாய' மென வோர் தலமுண்டெனச் சொல்லியிருந்தீர். அத்தலத்து மான் மியத்தினை யிப்போது விரும்புகின்றேமென்றனர். சூதமாமு னிவர்கேட்டு அஞ்சலித்து ஆனந்தக் கண்ணீர்சோர முனிவர் களைநோக்கிச் சொல்லுவாராயினர். தவநெறியிறசிறநத பெரியோர்களே! அமுதபானம் நரைதிரைமூப்பைப் போக்குவதேயன்றி முத்தியைத்தருவதன்று. சிவதல மானமியமோ, நரைதிரை மூப்பைத்தருவதாகிய தேகபநததைதை யொழிகது முத்தியைததரும் அதிசயத்தையுடையது. ஆகையால், இப்

* வடதிருமுல்லை வாயிலுக்குக கிருதயுகத்தில் இரதகினவனம் எனறும் திரேதாயுகததில் 'வில்வவனம்' என்றும், துவாபரயுகத்தில் 'சண்பகவனம்' என்றும், கலியுகத்தில் 'மாலதி (முல்லை) வனம்' என் றும்பெயா.

போது ஆதியந்தமில்லாத சிவபெருமான் அமர்ந்தருளும் அநந்ததிருவலிதாய மான்மியத்தினைச் சொல்ல நேர்ந்த என் புண்ணியமே புண்ணியம். நாயேனை யடிமையாகக்கொண்ட திருவலிதாய நாதனது சரணாரவிந்தங்களைச் சோமவாரமாதி விசேட தினங்களிற் பூரணபத்தியுடன் தொழுது வணங்கு கின்றவர்கள் சகலசம்பத்துடனே யுலகில் பலநாள் வாழ்ந்து பின்னர் நவரத்தினசோதி விமானத்தின்மே லேறிக்கொண்டு அரம்பையா வெண்சாமரைப்போடவும், அமரர்கள் போற் றவும், பலவாத்தியங்கள் மெல்ல முழங்கவும், தேவேந்தி ராதி தேவர்கள் இவ்வளவு வைபவம் நமக்கில்லையே யென்று பொறாமை யடையவும், மகிழ்ந்து சென்று சிவலோகத்தை யடைந்து சிவானந்தபோகத்தை யனுபவிப்பார்கள். இத்த லத்திற்செய்யும் தருமமொன்று கோடியாகவளரும். இத்தல தத்தின்மகிமை முழுவதினையும் எனனொருநாவாற சொல்லுந் தரமன்று. ஆயினுஞ் சம்புசப்த வாச்சிபார்த்தராய் விளங் குஞ் சிவபெருமானாகிய வலிதாயநாதன திருவடிகளை என் மனதிற சிந்தித்துக் கூடியவரையில் சொல்லுகின்றேன்; ஒரு மனதாய்க் கேளுங்களென்று போதசாகரமாகிய சூதமாமு னிவா சொல்லத தொடங்கினர்.

நைமிசாரணியச் சருக்க முற்றிற்று.

பரத்துவாசர் பூசித்த சருக்கம்.

சிவானந்தச்செல்வர்களே! சகலகலைகளினும் வல்லவராகிய உதத்தியர் எனனுமோர் முனிவரும், அவரது மனைவாழ்க்கைக்குரிய கற்பினிற்சிறந்த மமதையென்பவளும் இல்லறவாழ்க்கை நெறிதவறாமல் நடந்துவருகையில், புத்திரப்பேறின்றிப் பரிபூரண சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமானைப் நோக்கித் தவங்கிடக்க, மமதையென்பவள் கருப்பம் வாய்ந்தனள். அதிரூப சவுந்தரியவதியான அம்மமதையின் கரியகூந்தலினையும், பவளவாயினையும், மதுரமான சொல்லினையும், தேமற்படர்ந்த தனங்களினையும், தளிர்போன்ற கைகளினையும், விசாலமான அல்குலினையும், உதத்திய முனிவரின் தம்பியாகிய வியாழ முனிவர் கண்டு அவள் தனித்திருங்குஞ் சமயத்தில் அவளைச் சமீபித்து இங்கிதசரச சல்லாப போக வார்த்தைகளை நயமாகப்பேசித் தன்னை யணையும்படி இரக்கத்துடன் வேண்டிக் கொண்டனர். அவள், தனது மைத்துனனை நோக்கிக் கொழுந்தனே! நீ இங்ஙன நினைத்கல் தகாத காரியம. இதனால் நான கற்பிழந்தவளாகி விடுதலே யன்றி, உன்றனுக்கும் உனறமையனுக்கும் பகை விளையும். தமையனுக்குப் புத்திரப்பேறில்லாத காலத்தில், தம்பியைக் கொண்டு புத்திரனை உண்டாக்கிக் கொள்ளலாமெனல் இவ்யுக தருமமாயினும் நானிப்போது உன் தமையனுக்கே கருப்பம் வாய்ந்திருக்கின்றேன். ஆதலின், ஆடாத காரியத்

றை பிரவேசிப்பது அழகன்று. பாவத்தினையும் பழியினையுந் தேடிக்கொள்ளுதல் நம்மரபிறகு நலமாமோ என்றனள். வியாழ பகவான் தனது மதனியார் வார்த்தைகளைச் சிறிதுங் கவனியாது, மேல் விழுந்து வலாத்காரமாகப் புணர்நதனர். அப்போது, மமதையின கருபபத்திலிருந்த சிசுவானது சிவானுக்கிரகத்தா லுற்பத்தியா யிருப்பதால், இவ்வுண்மை தெரிந்து கொண்டு, வியாழ முனியின வீரியத்தையுள்ளே பிரவேசிக்க வொட்டாது தடுத்து வெளிப்படுத்தி விட்டது. வியாழ முனிவரிது தெரிநது கருப்பத்திலிருக்கும் குழந்தை குருடர்கப் போகக்கடவது என்று சபித்தனர். வெளிப்பட்ட வீரியம் தேவ குருவாகிய வியாழ பகவானுடைய தாகலின், அது வீணாகாதபடி தேவர்கள் ஒரு பரத்துவாச பட்சியினை * யுண்ணும்படி செய்தனர். அப்பறவையினின்றும் பரத்துவாசமுனிவர் † பிறந்தனர். மமதை வயிற்றினின்றுங் குருடாகப்பிறந்த தீர்க்கத முனிவர் சில நாளைக்குப் பின்னர், தனது சிறிய தந்தையாராகிய வியாழ முனிவரை நோக்கித் தநதையே! நீ சிறிதும் விவேக மின்றி யென்றாயைப் புணர்ந்த தல்லாமல், என்னையும் அநதகனாகப் போம்படி சபித்தாய்.

---

* பரத்துவாசம்=கரிக்குருவி. இது வலிய னென்றும், கருங்குருமா னென்றும் வழங்குகிறது.

† சதாசிவ மூர்த்தியினது திருமுகங்களினுண்டான பஞ்ச பிர்ம விருடிகளிலொருவராகிய பரத்துவாசர் இவரன்று.

ஆகையால், உன்மனைவி யுன மாணாக்க * னொருவன்
பால் புத்திரனைப் பெற்றுக் கொள்ளக் கடவள் என்றனர்.
பின்பு பிரகஸ்பதியாகிய வியாழ பகவானுக்குப் பிறந்த பா
த்துவாசர் பறவையினிடமாக வுதித்த தனது சென்மத்தினுக்
குக் காரணமான வினையினை நினைந்து நினைந்து துக்கித்துத்
தலயாத்திரை செய்யக்கருதிப், புண்ணிய பூமியாகிய பரத
கண்டத்திலுள்ள சிவதலங்களை யெல்லாந் தரிசித்துக் கொண்
டே தெனறேய நோக்கிவருகையில், அரும்புகளையு மலர்களையு
முடைய சோலைகளாலும், சணபக விருட்சங்களாலும், வரி
சை வரிசையான தென்னமரங்களாலும், வாழைகளாலும
சூழப்பட்ட தாமரை மிகுந்திருக்கும் சுனைகள் நிறைந்த வொ
ரு வனத்தினைக் கணடு அதில் வேத ரூபமாகிய கொன்றை
விருட்சத்தினடியிற் சுயம்புவாக வெழுநதருளியிருக்கு மொரு
சிவலிங்கப் பெருமானைத் தரிசித்தவுடன றனது மனதிலி
ருந்த சஞ்சலமெலா நீங்கி, ஆனந்தமே லிடக்கண்டு ஆச்
சரியமடைந்து அவ்விடத்திலோர் தீர்தத முணடாக்கி வெகு
காலம் அப்பெருமானைப் பூரண பததியுடன் பூசித்துக் கொ
ண்டிருந்தனர். ஓர்நாள், சர்வ சகத்காரணப் பிரபுவாகிய
சிவபெருமான் தருமதேவதையான இடபவாகனத்தினமேல்
மாங்குயில்போல் மதுர வசனங்களை வசனிக்கு மலைமகள

* இச்சரித்திரம் திருவானமியூர்ப் புராணத்துச் சநதிரன காம
நாசப்படலத்திற் காண்க.

சமேதராய் விநாயகர், சுப்பிரமணியர், திருநந்திதேவர், முனிவர்கள் சூழக் காட்சிகொடுத்தருளினர். அரியயற்குமரிய திருவடிகளைப் பரத்துவாச முனிவா தரிசித்து அடியற்ற மரம் போற் கீழேவிழுந்து எழுந்து வலம்வந்து கூத்தாடி இருகரங்களையு மஞ்சலித்து, ஆனந்தபாஷ்பஞ்சொரிய, ஏ சங்கரா! சதாசிவா! சம்போ! சசிதரா! சங்காதரா! கங்காளா! கண்ணுதலோய்! கயிலையாளி! கறைமிடற்றோய்! காமநாசா! காலகாலா! போறறி போற்றி யென்றிரந்தவுடன், அடியார்க்கருள்சுரக்கு மண்ணல், “குழந்தாய்! நின் பூசையை ஏற்றுக் களிப்புற்றனம் உன்மனதி லுண்டாயிருக்கும் கவலையையொழிக. உன பிறப்பை யுன்னி யினியாரு முன்னை யிகழார்கள். நீ முனிவர்கட்குள் நாயகமாக விளங்குக. அரசர் குருவாகத் துரோணாச்சாரியனென்னு மோர் மைந்தனைப்பெற்றுச் சுகமாக இருக்கக்கடவை” என ஆசிமொழித் தந்தருளினர். பரத்துவாசர் சுவாமியை நோக்கிப் “பெருமானே! அடியேனுடைய பூசையினை யுரிமையாக ஏற்றுக்கொண்ட தேவரீருக்குப் பலிதாய நாதன்’ என்றும், இவ்விடத்திற்குப் ‘பலிதாயத்தலம்’ *என்றும், என்றுலெடுத்ததீர்த்தத்திற்குப் ‘பாரத்துவாச தீர்த்தம் என்றும் வழங்கவேண்டும். இத்தலத்

* பலி = பூசை தாயம் = உரிமை பலிதாய நாதர் = பூசையை யுரிமையாகக்கொண்டவர். பலிதாய மெனறது - தமிழில் வலிதாயமென்றாயிற்று. வலியன் + தாயம், வலிதாயமெனினும் பொருந்தும், வலியன் = பரத்துவாசர்.

திற்கு வந்து தரிசிப்பார் எத்தகைய பாவிகளேயாயினும் அவர் பாவங்களை யொழித்துச் சகல வைஸ்வரியங்களையும் அவர்களுக்குக் கொடுத்தருள வேண்டும்" எனப்பிரார்த்தித்தனர். "அவ்வண்ணமேயாகுகவென் றருள்சுரந்து சாமகண்டனாகிய சிவபெருமான் பெருங்கருணைக் குடி கொண்டிருக்கும் பெருமாட்டியுடனே அந்தர்த்தான மாயினார்.

பரத்துவாசர் பூசித்த சருக்க முற்றிற்று.

தேவகுரு காமநாசச் சருக்கம்.

சைவாசாரத் துல்லியர்களே! தேவர்கட்கெல்லாம் ஆசிரியத் தலைமைபூண்டு விளங்கும் பிரகஸ்பதியாகிய வியாழபகவான், தனது தமையன் உதத்திய முனிவரது மனைவியாகிய மமதையைச் சேர்ந்து பரத்துவாசரைப் பெறுவதற்குக் காரணமாக விருந்ததன்து கர்மத்தினை யெண்ணியெண்ணி மனத்துயர மிகவடைந்து அனுதாபப்பட்டுப் பரிகார மொன்றுந் தோன்றாது சிந்தா குலத்தை யுடையரா யிருக்கையில், அச்சமயம், அங்குச் சிவபெருமான் றிருவுருக் கொண்டாற்போல், முழுநீறுபூசிய மார்க்கண்டேய முனிவர் சமீபிக்க, உடனே வியாழமுனிவ ரெழுந்து அடிதொழுது, கைகூப்பி நின்றிட,

ஆசீர்வதித்து, "ஓ தேவ குருவே! நின் முககமலம் வாட்ட முற்றிருப்ப தென்னை?" என்றனர். தாரகைத் தலைவனுப பிரகஸ்பதி நடந்த விருத்தாந்தங்களை யெல்லா மறிவித்து "அப்பா! உன்னை என்னிஷ்ட தெய்வந்தான் கொண்டுவந்து விட்டது. எனக்கு நீயே துணைசெய்ய வேண்டும்" என்று கூறக்கேட்டு, மறலியைவென்ற மார்க்கண்டேய முனிவர்சொல்லுவாராயினர். "முனிவரனே! நீ என்ன காரியஞ் செய்தனை! ஒரு பெண்ணின் கற்பினைக் கெடுக்கும் பாவமோ, கொடிது கொடிது!! காமத்தினை யடக்கி யாள்பவனே ஞானி யெனப படுவன். காமத்தால் இந்திரன் ஆயிரங்கண்ணனுனன். காமத் தாற் குபேரன கண்ணிழந்தான். காமத்தால் நகுடன் உரு மா றினன். காமத்தாற் கண்ணன் பலபிறவியடைந்தான். ஆத லின் காமத்தால் விளையுங் கெடுதிகள் பல. உனக்குக் காமத் தாலுண்டாகிய பாவத்தினை யொழிக்க வோர் சூழ்ச்சி சொல் லுகின்றேன் கேட்பாயாக. இப்பாவம், சமஸ்தசரீர அந்தராத் மாவாக விளங்குஞ் சிவபெருமான் அருள் கிடைத்தாலன்றி யொருபோது நீங்காது. அத்திருவருள், மெய்யன்புடனே பூசைசெய்தலால் வரும். அப்பூசை சிவலிங்கப் பூசையே யாம். அப்பூசை செய்தற்குரிய இடம் சிவதலங்களேயாம் அத்தலங்களில், விருத்த க்ஷீரநதி தீரத்தில் ஒப்புயர்வில்லா தோங்கும் திருவலிதாயமே மிகச்சிறப்புடைத்து. அத்தலத் துப்பெருமானை பூசைசெய்து தேவர்களும் முனிவர்களு மற் றுமியாவரும், பெரும்பேறுபெற்றுப் பேரின்ப மடைந்தின

துய்ந்தனர். மோட்சத்தினைக் கைவல்லியமாகப் பெறுதற்கு இத்தலத்தினைக் காட்டிலும் வேறுதலமுண்டோ? இல்லை! இல்லை!! அத்தலம், தென்றேயத்தில் இரத்தின வனத்திற்கும் * வேலவனத்திற்கும் மத்தியிலுள்ளது. அங்குச் சென்று பூசிக்கக்கடவை" எனக்கூறி விடை பெற்றேகினர்.

தேவகுருவானவர் சிவபத்தியிற் சிறந்த மார்க்கண்டேயர் கட்டளைப்படி நவரத்தின மயமாய் விளங்கும் திருவலிதாய மடைந்து, நீராடி, நித்தியானுட்டான முடித்துத் தேகமெல்லா நீறணிந்து, நெற்றியில திரிபுண்டரமிட்டுக் கண்ட முதலிய வங்கங்களில் உருத்திராக்க மாலிகை தரித்து, மாசில்லாது புகழ்பெற்றோங்கும் திருவலிதாயத்தி லெழுந்தருளியிருக்குஞ் சோதிலிங்கப் பெருமானை இதயார விந்தத்தில் ஆவாகனஞ் செய்து, வந்தனை வழிபாடு புரிந்து கொண்டிருக்கையில், திருவருள் சுரந்து, உலகமாதாவாகிய உமையம்மையுடன் சம்பு சப்தவாச்யனான சிவபெருமான் எதிரில் தோன்றிக் காட்சிக் கொடுத்தருளினார். திருமாலும பன்றியாச் சென்றுணராத் திருவடியைக் தேவகுரு தரிசித்து அனலிற் படுமெழுகுபோன் மனமுருகித்தொழுது சொல்லுவாராயினார்.

"மாலயனறியா மாதேவா! உன்பாதமே கதி. பரசிவனே-பரஞ்சுடரே - பரம்பொருளே - பரஞ்சோதியே - பசுபதியே

* வேலவன மென்பது திருவேற்காட்டினை

சரணம், சரணம். எம்பெருமானே, சகலவான்ம கோடிகட்கு நீ தந்தை, பார்வதி - தாய் - அன்பானதாய் தந்தையர்களிடத்தில் தங்கள் குற்றங்களைச் சொல்லிக் கொள்வதற்கு நாணப்படுவர்களுண்டோ? இல்லை. ஆகலின், அம்மையப்பராகிய உங்களிடத்தில் என்குறைகளை முறையிட்டுக் கொள்வதில் நான் ஏன் வெட்கப்பட வேண்டும்? பெருமானே! நானறியாது செய்த காமத்தால் உலகம்பழித்து என்னை யொழித்துவிடாதபடி யென்மேல் கருணை வைத்துக் காத்தருள்வது உன்பாரம். தந்தையே! தாயே! தஞ்சம், தஞ்சம், என்றனர். சர்வலோக ஆதாரபூதனாகிய பெருமான் புன்னகை செய்து, அன்ப! உன் பாவம் உனனைவிட் டொழிந்தது. இனித் தேவர்க ளெல்லாம் உன்னைத்தங்கள் குருவெனக் கொண்டாடுவதிற் றடையில்லை. சுகமாகவாழக்கடவையென்று திருவாய் மலர்ந்தருளிச்சிவலிங் கத்துண்மறைந்தருளினர்.

தேவகுரு காமநாசச் சருக்க முற்றிற்று.

கேசவன் பாவநாசச் சருக்கம்.

சிவானுபூதி மான்களே! தாமரையாசனத்தில் வீற்றிருக்கு நான்முகக் கடவுளின் புத்திரனாகிய தக்கன், தனக்குண்டா யிருந்த அதிகாரச் செருக்கினால், அகில லோகநாயகனாகிய சிவபெருமானை விலக்கித் திருமால் முதலிய தேவர்கள் சூழ வொரு வேள்வி செய்யத் தொடங்கினன். அதனையறிந்த

நாரதமுனிவர் வெள்ளியங்கிரியை யடைந்து விமலனிடத்தில் விஞ்ஞாபனஞ் செய்தனர். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த அமுதம் போன்றவளாகிய உமாதேவியார் தனது தந்தையாகிய தக்கன் நடத்தும் வேள்வியைப் பார்க்கும் பொருட்டுத் தனது நாயகனிடத்தில் விடைபெற்று வேள்விச்சாலையை யடைந்தனர். தருக்கே யுருவாயமைந்த தக்கன் அம்மையாரைக் கண்டு கோபித்துப் பற்பல விதமாகப் பரஞ்சோதியாகிய பசுபதியை நிந்தனை செய்தனன். கேட்டவம்மையார் பொறாதவராகி "ஏ தக்கனே! அக்னி சோமேந்திர விட்டுணுவாதி சர்வதேவ தனுர்ப்பூசனாகிய பெருமானை நீ பழித்தமையினால், உன் வேள்வியானது சுடுகாடாகக் கடவது. உன் றலையறுபட்டுப் போகக்கடவது" என்று சபித்து, அக்கினியை வளர்த்தி யதில் மூழ்கித் தன்னைப் புத்திரியாகப் பெறவேண்டிச் சிவபரஞ்சோதியை நோக்கித் தவங்கிடக்கும் இமயவரசன் மகளாக அவதரித்தருளினர். பின்பு, ததீசியாதி சைவமுனி புங்கவர்கள் தக்கனைநோக்கி, "ஏ! பிரம புத்திரனே! மறையனைத்து மகதேவனைக் காதபதியென்றும், மேதபதியென்றும், அத்வராஜனென்றும், எக்ஞபதியென்றும் பல நாமங்கள் பாராட்டி யுதகரித்திருத்தலை நீ யறிந்தாயில்லையோ? எவன் அன்னியமான ஈன தெய்வங்களோடு சமானமாக ஒரு வார்த்தையாவது மகாதேவரைப் பேசுவானோ, அந்தத்துர்மதியே சண்டாளனாவனன்றி, உலகப் பிரசித்தியால் சண்டாளனென்றழைக்கப் படுமவன் சண்டாளனுகாரன் என்னும்

புராணவசனம் கேட்டதில்லையோ? சுரசிரேஷ்ட பிரபுவாகிய ஏ ருத்திரமூர்த்தி! உன்னை யிதரத்தெய்வங்களோடு நமஸ்கார ங்களாலும், அவல தோத்திரங்களாலும், ஆவாகனங்களாலும் கோபிக்கச் செய்யோம் என்ற சுருதியினையும் கேட்டிலையோ? அந்தோ! எஞ்ஞபதி சிவனேயென் றறியாதவன் தலையிடரு றுமே ஆகையால் இனியேனும் அகிலலோகமுந் தொழு மெங்க ளாண்டவனுக் கவிசளிப்பாயாக" என்று பல புத்தி கூறியுங் கேளாதவனாய் மேலு மேலு மிகழ்ந்தனன். இவற் றை யெல்லாம் நந்தி யெம்பெருமான் வாயிலாகக் கைலாசபதி யறிந்து கொண்டு வீரபத்திரக் கடவுளைத் தனது பால நேத் திரத்தினின் றுமுண்டாக்கி, "ஏ வீரனே! நம்மை நிந்தித்துத் தக்கன் வேள்வி புரிகின்றனன். நீ அவ்விடஞ் சென்று நம க்கு அவியைக்கேள். கொடுத்தால் வந்து விடக்கடவாய். மறுத்தானேல், யாகத்தை யழித்து, அவன்றலையை யறுத்து, அவனுற்ற தேவர்களைத் தண்டஞ் செய்து வருவாய்" என்று ஆஞ்ஞாபித்தனர். உடனே வீரபத்திரர்தன் றந்தையாரிடத் தில் விடை பெற்றுக்கொண்டு வேள்விச்சாலையை யடைந்து தக்கனை நோக்கி, "ஏ தக்கனே சர்வைஸ்வரிய சம்பன்னரான, சிவபெருமானுக்குரிய அவிப்பாகத்தைக் கொடு" என்றனர். அதற்குச் சிறுவிதியாகிய தக்கன் பின்வருவது தெரியாமல், வடவா முகாக்கினி போற் சீறிச்சினந்து, "அச்சுடலை யாடி க்கு அவிப்பாகங் கொடேன்" என்றனன். அங்கிருந்த தேவர் களு மவுன முற்றிருந்தனர். உடனே வீரபத்திர மூர்த்தி

ஆக்கிரமித்து வேள்விச் சாலையிற் பிரவேசித்துப் பிரமன்றலை நான்கு மதிரும்படி குட்டினர், அவன் மனைவி சரஸ்வதியின் மூக்கை யறுத்தனர். குயில் வடிவங்கொண்டு ஓட வாரம்பித்த இந்திரனை வாளால் தகர்த்தனர், சமனைக் கொன்றனர், சந்திரனைப் பாதத்தாற் றேய்த்தனர், சூரியனது எண்ணனகு பற்களையு முதிர்த்தினர், அக்கினியின் கரங்களைத் துண்டித்தனர். இலக்குமியி னிளமுலைகளை யீர்த்தரிநதனர், தக்கன் சிரங்கொய்தனர். இவற்றை யெல்லாங் கண்ட நாரணன் அதிகோபங்கொண்டு கர்ச்சித்து, கருடவாகனமேறி, எதிரில் வநது தனது சக்கராயுதத்தினைச் சுழற்றிப் பிரயோகஞ் செய்தனன். வீரபத்திர சுவாமி ஓர் ஊங்காரஞ் செய்து, அச்சக்கரத்தினைத் தனது இடது கரத்தால் வாங்கி வீசி யெறிந்தனர். அதனை யொரு பூதம் வாயிற் போட்டுக் கொண்டது. பினனர்த் திருமாலைப் பிடித்துப் பாசத்தாற் கரங்களைக் கட்டி, காலில் விலங்கிட்டு, அவ்வேள்வியிலிறநது கிடக்கிற பிணங்களைச் சேர்த்துப் பிணித்து, அவனறலைமேலேற்றி, வேள்விச் சாலையை மூன்று தரம் வலம் வரும்படி செய்தனர். அச்சமயத்தில், கருணை சமுத்திரமாகிய கண்ணுதற்கடவுள் இடபவாகனரூடராய் அவ்விடம் எழுந்தருளினர். சுவாமியைக் கண்ட விஷ்ணு மூர்த்தி நாண மடைந்து, பயந்து நடுநடுங்கி யோர் புர நின்று, "அப்ரமேய, அநாமய, நிர்க்குண, நிரஞ்சன, பிரணவ சொரூப, நாமரூபரகித, கைலாசசிகரவாச, உமார்த்தகிருத சேகர, மிருகவஸ்த, பஸ்ம தூளித விக்ரக, பஞ்சாநந, சந்திர

சேகர, வியாக்ர சர்மாம்பரதர, பஞ்சகிருத்ய சம்பன்ன, ஆண்டருளும், அடிமையை ஆண்டருளும்! அறியாது செய்த பிழையை மன்னித்தருளும்" என்று பலவாறாகத் தோத்திரஞ் செய்தனன். பரம பதியாகிய பரமேஸ்வரன் மனமிரங்கிக் கருணை கூர்ந்து சொல்வாராயினர். "மாலிற் சிக்குண்டு மயங்கும் வ மாயவனே! நீ நம்மைச் சிறிதுந்தெரிந்து கொள்ளாது, மற்றைய சாமான்ய தேவர்களைப்போல நீயுமத்தக்கன் வேள்விச்சாலையிற் சேர்ந்திருந்தா யாகலின், வேள்விச் சாலையிலிறந்த தேவர்களின் கேசங்களை (பிணங்களை) சுமக்கப் பெற்றனை. இதனால், இன்று முதல் நீ யெல்லாராலும் 'கேசவன்' என்று அழைக்கப்படுவாய். அன்றியும், நம்மை நிந்தித்த துஷ்டன் சினேகத்தை விரும்பியதால், உனக்கு நேர்ந்த பாவத்தினை யொழிக்கக் கேசவனென்னும் பெயருடன் பூமியிலே சென்று, நாமிகவும் விரும்பத்தகுந்த திருவலிதாய க்ஷேத்திரத்தினை யடைந்து நமது அருட்குறியைப் பூசிக்கக்கடவாய்" என்று கருணை செய்து; வீரபத்திரரைக் கொண்டு மற்ற தேவர்களைப் பிழைப்பித்துப் பிரமன் கேட்டுக் கொண்டபடி தக்கனை யாட்டுத்தலையுடன் எழுப்பி, இமய மலைக்குச் சென்று, பார்வதி தேவியாரை மணந்து, கைலாயத்திற் கெழுந்தருளினர்.

பின்னர், செகசென்மாதி காரண வஸ்துவாகிய சிவபெருமான்றிரு ஆஞ்ஞையின்படி கேசவ னெடிய மதிலாற் சூழப்பட்ட திருவலி தாயத்தலத்தினை யடைந்து, தீர்த்தமாடி, விபூதி உருத்திராட்சந் தரித்துப் பூசைக்கு வேண்டு முபகர

ணங்களாகிய பீதாம்பரம், இரத்தினாபரணம், சந்தனம், திருமஞ்சனம், தூபம், திருப்பள்ளித்தாமம், தீபம், பஞ்ச கவ்வியம், கனிகள், தேன், திருவமுது சேகரித்துச் சிவாகமப்படி ஆவாகனம், தாபனம், சந்நிதானம், சந்நிரோதனம், அவகுண்டனம், தேனு முத்திரை, பாத்தியம், ஆசமனீயம், அர்க்கியம், புட்பதானம், தூபம், தீபம், நைவேத்தியம், பானீயம், ஆராத்திரிகை, சபசர்ப்பணையாஞ் சோட சோபசாரஞ்செய்து, உரை தடுமாற என்பு நெக்குருக உடலெலா மென்மயிர்ப் பொடிப்ப ஆனந்தக்கண்ணீர் பெருக அஞ்சலித்து, மோட்ச விதாயமான பஞ்சாக்கரஞ் செபித்து, வணங்கிக்கொண்டு திரும்பி, அத்தலத்தினுக்குச் சிறிது தூரத்திற் குணதிசையிலொரு பன்னசாலை யேற்படுத்தி, அதிற்றங்கி, நாடோறுங் காலையிலு மாலையிலுஞ்சென்று திருவலிதாய நாதனை வணங்கிக் கொண்டிருந்தனர். ஓர்நாள், “கேசவனே, நீ செய்த பாவமுன்னைவிட்டு விலகியது” என்று அசரீரிகேட்ட மாத்திரத்தில், கங்குகரைகாணாத ஆனந்தங் கொண்டவராய் அடியற்ற பனைபோல கீழே வீழ்ந்து எழுந்து தோத்தரித்து விடைபெற்றுச் சென்றனர்.

திருவலி தாயத்திற்குச் சமீபத்திலக்கேசவன்றங்கிவாழ்ந்த * கோயிலுக்குச் சனிவாரந் தோறுஞ் சென்று, கேசவ ஆதி கேசவ, ஆதிகேசவப் பெருமாளே. நாராயணா, ஆதிநாராயணா,

---

* இக்கோயில கொண்ணூரிலுள்ள ஆதிகேசவப் பெருமாள் ஆலயமேயாம். இக்காலத்தில் தாமோதரப் பெருமாள் ஆலய மெனவழங்கி வருகிறது. தாமோதரனார் சிலகாலம் அங்கிருந்தமையினால்.

ஆதிநாராயணப் பெருமாளே, தேவ, வாசுதேவ, வாசுதேவப் பெருமாளேயென்று வந்தனை வழிபாடு செய்யப் பெற்றவர்கள் பசியாற் பீடிக்கப்படாமல் எந்நாளும் அறுசுவையோடுங் கூடிய பிரசாதங் கிடைக்கப்பெற்று வாழ்ந்து, பின் வைகுந்தப்பதவியினைப் பெறுவார்கள். இவ்விடத்தில் துவாபரயுக முடிவிற் றமோதரனுருஞ் சில காலந் தங்கிவாழ்ந்து வலிதாய நாதனை தரிசனஞ் செய்துகொண்டிருந்து சென்றனர்.

கேசவன் பாவநாசச்சருக்க முற்றிற்று.

அனுமா ரபராதமன்னிப்புச் சருக்கம்.

சிவகாருண்ணிய முனிவர்களே! பூர்வத்தில் இலங்கைக் கதிபனுன இராவணன் சன்னியாசிவேடம் பூண்டு, தண்டகாருண்ணியத்தில் இரவிகுலத்தோன றலாகும் இராமன் பத்தினியாகிய சீதாபிராட்டியை யபகரித்துக்கொண்டு இலங்கைக்குப் போய்விட்டான. வீராதிவீரனுகிய இராமன பெண்டிழந்துதன் றம்பி இலட்சுமணனுடன் ஏங்கிக் காஞ்சியிற் சென்று, மறையுருவமைந்த மாவடியில் வீற்றிருக்கும் ஏகாம்பர நாதனைப் பணிந்து பாசுபதாஸ்திரம் பெற்று, கிஷ்கிந்தையைச் சேர்ந்து, சுக்ரீபன் சேனையுடன் போய், சேதுபந்தனஞ்செய்து கடலைக் கடந்து, இராவணுதி யசுரர்களைக் கொன்று, சீதையைச் சிறைமீட்டுக்கொண்டு திரும்பிக் கந்தமாதனத்தில் வந்தவுடன்,

இராவணனது பிரமகத்தியானது இராமனைச் சூழ்ந்துகொண்டு இமைப்போது நீங்காமல் உம்மென்னும், தனது மார்பினைத்தட்டும், முகத்தினைச் சுளித்துக்கொண்டு சண்டைக்கு வரும், ஆரவாரஞ்செய்யும், உதட்டினைமடிக்கும், கூரியபறகளை நெறநெறவெனக் கடிக்கும், கீழேவிழும், மேலேயெழும்பும், என்னை யெதிர்ப்பவ ரூரடா வென்னும், வாடா இந்த மானிடனை யின்றே கொன்று தின்றேப்ப மிடுவேனென்னும், அட்டகாசஞ் செய்யும், கோபிக்கும், என்னைப்பகைத்து உய்யவல்லவரூரடா வெனனும். இதனைக்கண்ட இராமர் முகம் வாடி, "தம்பீ, தம்பீ, இலட்சுமணா! இஃதென்னை? இராவணனுபத்திரவம் பண்ணுகின்றனனே" என்றனர். "அண்ணா, அஞ்சவேண்டாம். அரக்கனன்றே யழிந்தனன்" என்றான் இலட்சுமணன். இராமர் நடுங்கி, "ஜானகீ, ஜானகீ! இதுவென்னை! பத்துத்தலையன் பதரச்செய்கின்றனனே" என்றனர். "சுவாமீ! பாவி முன்னமே படுகளத்திற் பட்டொழிந்தனனே" என்றனள் சீதை. இராமரொன்றுந் தோன்றாதவராகித் திகைதிகைத்துத் திகிற்பட்டு வாய்வரண்டு நடுநடுங்கி நான்குபக்கங்களிலுந் திரும்பித்திரும்பிப் பார்த்துக்கொண்டிருந்தனர். அச்சமயம், அவ்விடத்தில் திருநீற்றினொளி திகழும் அதிசயத் திருமேனி யுடையராய், சிவகதா சங்கீர்த்தன சீலராகிய சில முனிக்குழாங்கள் வந்து இராமரைக்கண்டு, "ஏ இராகவ; அஞ்சற்க நீ கொன்ற இராவணன் இராக்கதனே யாயினும், அவன் பிரமகுலத்தில் வந்த புலத்தியன் பெயரனாதலின்,

பிரமகத்தியாகவந்து பீடிக்கின்றனன். அதனையொழிக்க வே
ருபாயம் கேட்பாயாக. திருகைலாயத்தினின்றும் ஓர் சிவலி
ங்கப் பெருமானைத் தருவித்து, இவ்விடந்தாபித்துப் பூசிப
பையேல், அது இன்னே நின்னைவிட்டு விலகும்'' என்றனர்.
இராமர்கேட்டு மனமகிழ்ந்து, இக்காரிய முடித்துவைப்பான்
புஜபல பராக்கிரம சாலியாகிய அனுமானொருவனேயென எ
ண்ணிக் கூறுவாராயினர்.

"அனும, சீதாசோகவிநாச! இப்போதெனக் குண்டாயி
ருக்கும ஆபத்தினின்று நீங்க, திருப்பாற் கடலினழகு மாறிட
பின்னிடவெண்சோதிவிரிக்குந திருக்கயிலாயத்திற்குச் சென்று
அருட்குறியொன்றினை யுடனே கொண்டுவரக்கடவாய்'' என்
று இராமர் சொல்லியவுடன் வாயுவின் ஔரச புத்திரனாகிய
அனுமான் வெள்ளியங்கிரிக்குச் சென்றனர். அவ்வனுமான்
வருதற்குச் சிலநாள் தாமதப்படலும், இராமர் மாதவர் கட்
டளையினபடி எழுந்து நீராடி, நித்தியானுஷ்டான முடித்துக்
கங்கணங்கரத்திறசேர்த்து, விபூதி யுருத்திராட்சம் புனைந்து
மிதுனமாதம் சுக்கிலபட்சம் புதவாரம் அஸ்தநட்சத்திரம் ஓ
டபலக்கினம் கூடிய சுபதினத்தில், தனது மனைவியாகிய சீதா
பிராட்டியார் தமது கரங்களாற்றிரட்டிக் குவித்தமைத்த* வா
லுகலிங்கத்தைச் சோடசோபசாரத்துடன் பூசித்து, பிர
தட்சண நமஸ்காரம் பல்லாயிரந்தரஞ்செய்து, பலவரம்பெ
ற்று, தன்முன்தோன்றும் பிரமகத்தியினைப் பிலத்தில் வீழ்

* வாலுகம்=மணல்.

த்தி, அவ்வாயலையடைத்து, அதன்மேல் வைரவக்கடவுளை த்தாபித்து, மனம்பூரித்துச் சிவத்தியானத்துடன் எழுந்த நளியிருந்தனர்.

இதுநிற்க, திருக்கயிலாயத்திற்குச் சென்ற அஞ்சனாதேவி மைந்தனாகிய அனுமார், வெண்ணிலாக் கிரணம்பொழியும் திருமேனியையுடைய நந்தியெம்பெருமான் சரோருகச் சரணிற்றாழ்ந்து, சிவலிங்கமொன்றினைப் பெற்று, கந்தமாதனம் வந்துசேர்ந்தவுடன், முன்னமே இராமரால் சிவலிங்கந்தாபித்துப் பூசிததிருக்கக்கண்டு வியசனமுற்று, இரகுநந்தனை நோக்கி, "ஐய! என்னைகாரியஞ் செய்தீர்! அடியேன்செய்த குற்றமியாது! பெண்ணாசையால் சுக்ரீபன் உம்மைச் சிநேகங்கொண்டான்; மண்ணாசையால் விபீஷணன் உம்மைச்சரணடைந்தான். நானோ தேவரீர் திருத்தொண்டு ஒன்றினையேகைப்பிடித்தேன் எனை இங்ஙனஞ் செய்தலழகாமோ" என்று தேம்பியழுதனன். சக்ரவர்த்தித் திருமகனார் அனுமார் முகநோக்கி. "மாருதிமைநத, பெரியோர் குறித்த சுபமுகூர்த்தம் தவறுதபடி செய்யவேண்டி நேரிட்டது, வேறொன்று நினைத்திலேன். நான்றாபித்த இராமலிங்கத்தின் முன்னர் நீ கொணர்நத சிவலிங்கத்தினைப் பிரதிட்டை செய்து பூசைசெய் இலையேல், என்னாற் பிரதிட்டித்த இலிங்கத்தினைப்பெயர்த்து நின்கையுற்ற பெருமானை அவ்விடத்திற்றாபிப்பாயாக" என்றனர்.

வாயுவின் மைந்தனுன அனுமார் கேட்டவுடன் ஆனந்தங்கொண்டு கிளம்பி, இராமலிங்கத்தினைத் தன்னிருகரங்களாலும் பிடித்தசைத்து மசையாததைக்கண்டு தற்போதமுற்றுத் தன் வாலாற் பலவலயஞ்சுற்றித் தன் முழுவலிகொண்டு ஆகாயத்தி லெழும்பியவுடன், தன்பெரிய தொருவாலற்றுத் திடீரெனக் கீழேவிழுந்து மூர்ச்சித்துப்போயினன். கண்ட இராமர், இலக்குமணர், சீதை முதலியோர் அனுமார் அகன் மார்பகமேல் வீழ்ந்து வாய்விட்டழுதயர்ந்தனர். பின்னெருவாறு தெளிந்து, அனுமாரை இராமர் தனது மலைபோன்ற தோளின்மீது சாய்த்துக்கொண்டு, " மாருதிச்சிங்கமே! என் செய்வேன், என்செய்வேன்! பம்பை நதிதீரத்திலெனைச்சினேகித்தென்னயர்வை மாற்றினை! சுக்ரீவனுக்கும் எனக்குஞ் சினேகஞ்செய்து வைத்தனை! கடலைக்கடந்தனை! மைநாகப் பருவதத்தை வீசியெறிந்தனை! அம்மலையரக்கி அலரவரக்கினை! இலங்காதேவியை இம்மென றூறினை! அசோகவனத்தினை ஆக்கிரமித்தழித்தனை! எண்பதினுயிர மரக்கரை மண்படச்சாடினை! சம்புமாலியைச் சயம்பெறவாட்டினை! அட்ச குமாரனை அழிவுறயறைந்தனை! இலங்கைமுழுதும் வெந்தழல் மூட்டினை! இளமுலைச்சீதையை யென்பால் இன்பொடு சேர்த்தனை! ஆ! என்பொருட்டு இவ்வளவு பேருபகாரஞ் செய்த உனக்குப் பிரதியுபகாரம் நானென் செய்தனன் ஒன்றுங்காணேன் குழந்தாய்! நின் கண்ணைத்திறந்து என் முகத்

நினைப்பார்: அந்தோ, உன்னை எவ்வணம் பிரிந்துய்வேன் என் கண்ணிற் கருமணியே!" என்றனர்.

இத்தகைய வமுத மொழிகள் அநிலகுமாரனாகிய அநுமன் செவியினுழைந்தவுடன், சிறிது சோபந்தீர்ந்து எழுந்து, இராமலிங்கத்தினுக்கு வடதிசையில் அநுமலிங்கந் தாபித்துப் பூசித்துத் தான், சர்வ வல்லபமாந் தன்மை பொருந்திய சிவபெருமான் மாட்டுச்செய்த அபசாரத்தினை யெண்ணியெண்ணி நெஞ்சந்துணுக்குற்று வருந்தி வாடுகையில், மகதியாழேந்திய ஞானசிரோமணியாகிய நாரதமுனிவர் அவணடைந்து, நடந்த யாவற்றையும் விசாரித்துக் கருணைகூர்ந்து கூறுவாராயினர். "சஞ்சீவிராய நீ அம்பிகை பாகனுக்கியற்றிய அபராதமொழிய வேண்டுமாயின், கேட்பாயாக! எந்தப் புருடனானவன் சர்வசொரூபியாய்ச் சிவனை யறிந்து இலிங்கத்தில் பூசிக்கின்றானோ, அவன் செய்த பாவமனைத்தும் மன்னிக்கப்படும். திருமாலானவர், தனக்குப் பிருகுமாமுனிவர் சாபத்தாற் கிடைத்த பத்துப்பிறப்பும் உலோகோபகாரமாம்படி செய்துகொண்டது சிவலிங்கப்பூசையாலன்றோ? உனது நாயகனை மிரகுநந்தனுக்குண்டான பிரமகத்தி யொழிந்ததும் சிவபூசையாலென்பது நீ காட்சியி லோர்ந்தனையே ஆகலின், நீயுமங்ஙன மன்பொடு இன்னே செய்யக்கடவை. அச்சிவலிங்கபூசை உத்தமதலங்களிலியற்றின், அது பலன் கரதலாமலகம்போற் கிடைக்கும். இது திண்ணம், முக்காலமும்

தின்னம் அறிவாயாக'' எனக்கூற, அனுருற்றழிந்திக்கிடக்கும் அஞ்சனுதேவிததிருமகன், நாரதனை வணங்கிச் சிவபூசைக்குரிய, அவ் உத்தமதலம் எதுவெனக்கேட்க, மகதிமுனி அகமகிழந்து, ''சர்வபக்தசன சத்ரு அரணம் செய்பவராகிய சிவபெருமானுக்குப் பிரியமான தலங்கள் இந்நிலவுலகத்தின் கணனந்தமுணடு. அந்தத்தலங்களுக்குள், மணமலர்ச்சோலை சூழ்ந்த திருவலிதாய க்ஷேத்திரத்தைப்பார்க்கிலும் மேற்பட்டதலம் எக்காலத்திலும் எவ்விடத்திலுமில்லை. பெருமானுக்கு அத்தலமே பிரியமானது. தண்டரளம்போல் விளங்குந்தண்ணீர்த்துறைகளையுடைய அநத வலிதாயத்திரு நகரத்தில் கருணைவள்ளலாகிய சிவபெருமான் றன்னடியார் வேண்டும வரங்களை வேண்டியபடியே விரைந்து அளித்தருளுவர் மந்திரத்தலைமை பூண்ட பஞ்சாட்சரத்தினைத் தியானித்துப் பச்சிலையாலுலும் பனிமலராலுலும் பிளவுபடா பததியுடன் பறித்தணிந்து தொழுது துதிசெய்வதே அந்தப் பரம சிவத்திற்குப் பரம சந்தோஷம ஆதலின நீ அவ்விடத்திற்குப் போய் விபூதி உருத்திராட்ச மணிந்து பசுபதி நாயகனையனபொடு பூசித்து வேண்டிய வரங்களைப் பெற்றுய்வாயாக என்று உபதேசித்தருளி ஆசிமொழி கூறி ஆகாயவழிபோயினார். பின் அனுமார் இராமனைவணங்கி, சிவபூசைசெய்ய விடைபெற்று நாராயண விருதய சபமந்திரமாகிய பஞ்சாட்சர நாவினராய்த் திருவலிதாயத்தினை யடைந்து, தன் பெயரால் ஒரு தீர்த்தங்கண்டு, அதிலாடிச் சிவசின்னம்பூண்டு,

அன்பு மிகுந்து, ஆகமவிதிப்படி பூசைசெய்து, உண்ணலுறங்கல் முதலியவைகளை யொழித்து ஐம்புலனடக்கி நெடுங்காலந் தவஞ்செய்து கொண்டிருக்கும்போது, பொன்போல் விளங்குஞ் சடைமுடியுடைய சிவபெருமான் மயிலிளஞ் சாயற்போன்ற மலைமகளுடன் பனிங்குமலைபோல் விளங்கும் இடபத்தின் மீது காட்சி கொடுத்தருளக் கண்டு கைகூப்பித் தொழுது, "எம்பெருமானே, தேவரீர் மகிமைகளைப் பலதரம் எனது நாயகனாகிய இராகு நந்தனராற் கேட்டிருந்தும், சிற்றறிவினனாகிய யானது அறியாது, அகம்பாவமுற்று நின்பாலியற்றிய அரிய அபராதத்தை சமித்தருளவேண்டும் சிவனே! பெருங்கருணைத் தடங்கடலாகிய பசுபதீ! பார்வதீபங்கா!" எனவேண்டி, இன்னும் ஓர் வரம் வேண்டுகின்றான் வானரச் சிரேட்டனாந் தலைவன் அது யாதெனில்,—"அடியேன பூசையைக் கொண்டருளிய இந்தப் பரமலிங்கத்தைப் பணிந்து வணங்கப் பெற்றவர்கள் கடல் சூழ்ந்த உலகத்தில் உள்ள இலிங்கங்களெல்லாவற்றையும் வணங்கிய பலன் அடையும்படி கிருபை புரிந்தருளவேண்டும். நானெடுத்த தீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்பவர்கள் எத்தகைய இழிகுலத்திற் பிறந்தவரே யாயினும், எத்தகைய பாவம் செய்திருப்பவரே யாயினும் அவர்கள் செய்த குற்றங்களை மன்னித்தருள வேண்டும்' என்று வேண்டுதல் செய்ய, வேண்டுவார் வேண்டியதையே விரைந்து கொடுக்கும் கருணாநிதியாகிய கண்ணுதற்பெருமான்

அவ்வனுமனுக்கு வரமனைத்துங் கொடுத்தருளி உலகமாதாவாகிய அம்மையுடன் சோதி லிங்கத்தில் மறைந்தருளினார்.

அனுமாரபராத மன்னிப்புச் சருக்க முற்றிற்று.

இராமர் தரிசித்த சருக்கம்.

சிவாக்கிரயோகிகளே! வான்மைந்தன் மைந்தனாகிய அனுமான் மலைவளர் காதலி மணாளன் காதலித்த திருவலிதாயத்தில் மிகக் காதல்கொண்டு, அத்தலத்தில் சிவபுராணஞ் சொல்லுகின்றவர்களையும், சொல்லச் சிரத்தையுடன் கேட்கின்றவர்களையும், அதனை வியந்து கொண்டாடுகிறவர்களையும், சிவனடியார்களை யெதிர்கொண்டு சென்று அழைத்துவந்து அன்புடன் அமுதூட்டுகின்றவர்களையும், சிவபெருமானைப் பூசிக்குஞ் செயலையே மேற்கொண் டிருக்கிறவர்களையும், சிவநாம முழக்கத்தினையுங் கண்டு சிவபெருமானுடைய பத்தர்து பாததூளிதத்தைக் கவசமாகத் தன்னுடலிற்றுங்கி அத்தலத்தினை விட்டுப்பிரிய மனமெழாது பலநாள் வாழ்ந்துகொண்டிருக்கையில், கௌசலை மைந்தனாகிய இராமர் கந்தமாதனத்தை விட்டு அயோத்திக்குச் செல்லும்போது, பிறவித்துன்பங்களைப் போக்கிப் பேரின்பவீடு கொடுத்தருளுஞ் சிவபெருமான் ஆட்சியில் விளங்குந் திருவலிதாயத்தினை யடைந்து, காமதகனனான கண்ணுதலைக் கண்ணாரத் தரிசித்து, அகண்ட சச்சிதானந்த கனீபூதனே சரணம், அவாங்கமனோகோசரனே சரணம், இலயபோக வதிகாரஸ்தனே சரணம்

ஈசானுதிசப்த வாச்யார்த்தனே சரணம், உமாமகேஸ்வர மங்கள விக்ரகனே சரணம், ஊர்த்த தாண்டவ மூர்த்தியே சரணம், எல்லாம் வல்ல பரமசிவனே சரணம், எம்பெருமானே சரணம், அப்பனே சரணம் சரணம், ஐயனே சரணம் சரணம், அண்ணலே சரணம் சரணம், அரசே சரணம் சரணம் எனப் பல திருநாமங்களை யெடுத்துச் சொல்லி, அருச்சனை புரிந்து பேரின்பம் வளரத்தொழுது பலதரம் பஞ்சாங்க அஷ்டாங்கமாகப் பணிந்து, வந்தனை வழிபாடு புரிந்து சில நாள் அவ்விடம் வாசஞ்செய்து, வேதத்தில் விளையாடும் விமலனது சிவானுக்கிரகம் பெற்று, அனுமனுக்குப் பல முகமனை கூறித் தன்னுடனழைத்துக்கொண்டு அயோத்திக்குச் சென்றனர்.

இராமர் தரிசித்த சருக்க முற்றிற்று.

அகத்திய ரத்தி யொழிந்த சருக்கம்.

சிவஞானத் தபோதனர்களே! கடலேழையு மொரு உழுந்தள வாக்கி யாசமனித்த முனி வேந்தனும் அகத்திய முனிவர், ஓர் காலத்தில் இமயமலையினின்றுந் தென்றேய நோக்கி வந்து கொண்டிருக்கையில், மாயையின் மகளாம் அசமுகியின் புத்திரர்களாகிய வில்வலன் வாதாவி யென்னுங் கடைகர விருவருங் கண்டு, இம்முனிவரைக் கொல்ல வேண்டுமென்றெண்ணி, இளையோனாகிய வாதாவி யென்பவன் அஜவுருத்தாங்கி ஓர் காட்டில் மேய்ந்துகொண்டிருந்தனன.

மூத்தோனாகிய வில்வலன் நெற்றியிற் றிருநீறும், காதினிற் குழையும், கண்டத்திற் கண்மணியும், கரத்திற் றண்டு கமண்டலமும், அரையிற் கல்லாடையுந் தாங்கி முனிபோலுருக் கொண்டு குறு முனிமுன் வந்து, மூன்று தரம் பிரதட்சணஞ் செய்து அஞ்சலித்துச் சொல்லுவானாயினான். "ஏ முனியரசே ! தேவரீர் இவ்விட மெழுந்தருள அடியே னென்ன புண்ணியஞ் செய்தனன். மேலும், அடியேனைக் கிருதார்த்தனாக்கும் பொருட்டு ஏழையின் சிறு குடிசைக் கெழுந்தருளிப் போசனஞ்செய்து போதல் வேண்டும்" என்று அவரது திருப்பாதங்களில் தண்டாகாரமாகப் பணிந்து நின்றனன். தன்னிகர் விந்திய மலையின் செருக்கை யடக்கிய கும்பமுனி அவன் வஞ்சகத்தை யறியாது சம்மதித்து அவன் பின் சென்றனர். உடனே வஞ்சக வேடம் பூண்ட தகர்முகித்தனையனும் வில்வலன் நீராடிச், சமையற் சாலையிற் புகுந்து சுத்தஞ் செய்து கோலமிட்டுச், சுத்தமான வரிசியா லன்னஞ் சமைத்து, பல பதார்த்தங்களுடன் றகருருவங்கொண்ட தன் றுணைவன் வாதாவியை யறுத்துப் பக்குவமாகக் கறி யாக்கித், தன வேண்டுகோளுக்கியைந்த முனிச்சிரேட்டரை யோ ராதனத்தி லெழுந்தருளச் செய்து உபசாரத்துடன் றூப தீபந்தந்து அறுசுவையாக வமைத்த வன்ன பானாதிகளுடன் அவ்வசமாயிச் சக்கறியினையும் படைக்க, ஐம்புலனவித்த அகத்தியராகிய சிவராசயோகர் அன்புடனே யுண்டு பசிதீர்ந்து எழுந்தருளி யிருந்தனர்.

அதன் பின், சூர்முதன் மருகனும் தண்ணளியற்ற வில்வலன் தென்றிசை நிறுவிய தென்றல் உலவும் பொதியமாசைலத்துப் பெருந்தகை யண்ணலாம் அகத்தியருயிரை வாங்கக் கருதி, தம்பீ! வாதாபீ! வா விரைவுடனென்றனன். கொலைத் தொழிலையே தவமெனப் பூண்ட வம்பெருக்கும் படுபாவியாகிய வாதாவி, "அண்ணே! வந்தேன் இதோ வந்தேன்" என்று, உலோபா முத்திரையின் கொழுனராம் அகத்திய ருதரத்தினின்று ஆட்டுருவங் கொண்டு வெளிவர உத்தேசித்த மாத்திரத்தில், மூன்று போதும் முழுதுணர் முனிவர் தெற்றெனத் தெரிந்து சிவசிவ என்று விண்பட்டுருவும் விந்திய மலையைத் தரைபடப் படுத்திய தன்றிருக்கரத்தால் வயிற்றினைத் தடவுதலும், வாதாவி யவன கோதாவி விட்டுச் சீர்ணமாயினன். தம்பி மடிந்த சங்கதியைத் தெரிந்து துருவாச முனித்தோன்றலாகிய வில்வலன் தண்டொன்றேந்தி முனிவர் தலையில் மோத வந்தனன் சிருட்டியாதி தொழிறகளையு மியற்ற வல்ல அகத்திய முனிபுங்கவர் தன்னெதிருற்ற வொரு தருப்பையினை யெடுத்துச் சிவாஸ்திரமாகப் பாவித்துப் பிரயோகஞ் செய்து வில்வலனைத் * தடிந்தனர்.

* வில்வலனை இறந்தவிடம் - வில்வலன் வாக்கம : இது-வில்லிவாக்கம என வழங்குகிறது. இவ்விடத்திலேயே அகத்தியர் சிவலிங்கப் பிரதிட்டை செய்தது. வில்வலனையும் வாதாவியையும் கொன்றவிடம் 'கொண்ணூர்' என வழங்குகிறது. இவ்வூரில் வலிதாய நாதனைப்பூசித்த கேசவப்பெருமாளென்று வழங்குகிற தாமோதரப் பெருமாளாலயமுண்டு.

சிறிது நேரத்திற்கெல்லாம் வாதாபியும் வில்வலனு நீண்ட கரிய மேகம்போலு முருவங்கொண்டு, மிகக்கோப முடைய வராய் ஆரவாரத்துடன் அகத்தியர் முன் தோன்றினர். அது கண்டு முனிவர், 'துருவாச முனி மக்களிவர்கள். இவர்களைக் கொன்றமையால் பிரமகத்தி நம்மைச் சூழ்கின்ற' தென்றறிந்து, இதை யொழித்துக் கொள்ளும்பொருட்டு, அவ்விடத்தில் ஒரு சிவலிங்கம் பிரதிட்டை செய்து பூசித்த உடனே, தன் முன் வந்த சாயைகள் இம்மென மறைந்து விட்டன.

பின்னர், அவ்விடத்தினின்று மெழுந்து சென்று, சமீபத்திற் றவஞ்செய்து கொண்டிருந்த பரத்துவாச முனிவனைக் கண்டு அவருடன் அளவளாவித், திருவலிதாய நாதர் மகிமைகளைத் தெரிந்து தரிசித்து வணங்கிக் கண்ணீர் சொரிந்து, ஆனந்தத்தா லாடிப்பாடி அழுது தொழுது நிற்க, சருவான்மாக்களையு மீன்ற இளமுலைக் கன்னி கௌரிபாகனாகிய வலிதாயநாதர் காட்சிகொடுத்து, 'அன்ப! உன்னைப்பீடித்தபிரமகத்தி யினி யுன்னை யணுகாது. சுகமாகப் பொதிய மலைக்குப் போகக்கடவை' என்றனர். அகத்தியர் மீண்டும் வணங்கி, "பெரும! வில்வலனைக் கொன்றவிடத்தில் நான் பிரதிட்டித்த சிவலிங்கப் பெருமானுக்கு 'அகத்தீஸ்வரர்' என்று வழங்கவேண்டும். நானெடுத்த தீர்த்தத்தில் மங்களவாரம் ஸ்நானஞ்செய்து அகத்தீஸ்வரரை வணங்குகின்றவர்கள் பிணிகளை யெல்லாம் ஒழித்துச்சிவஞானச் செல்வமளித்து ஆதரித்தருள வேண்டும்" என்றனர். பெருங்கருணை வள்ளலாகிய பரசி

சனும் அவ்வரங்களைக்கொடுத்து, பரசிவையுடன் சிவலிங்கத்திற் புகுந்தருளினர்.

அகத்திய ரத்தியொழிந்தசருக்க முற்றிற்று.

பிரமன் முத்தியடைந்த சருக்கம்.

சிவபக்த சிரோமணிகளே! சத்திய லோகத்திலே வாணி சமேதனாய் நவரத்தின மயமான ஓர் சிங்காதனத்தின் மீது நான்முகக் கடவு ளெழுந்தருளி யிருந்து, ஓர்நாள் தனக்குள் தானே சிந்திப்பாராயினர். "நான் ஆண்டு கொண்டிருக்கும் இந்தச் சத்தியலோகம் உண்டாகி யழிந்ததற்குக் கணக்கு முண்டோ? அவ்வப்போது அவ்வுலகத்தினை யாண்ட பிரமனி களுக்குத்தான் கணக்கேது? அவர்களில் நானு மொருவன் றானே? என்றைக்காயினு நானும் இறந்துபோக வேண்டியது நிச்சயமென் றேற்படுகின்றது. ஐயோ! இத்தகைய அநித்ய தேகத்தை நிலையென நம்பி விஷயாநந்தத்தில் மூழ்கி வீணாகக் கெட்டேன்! மோசம் போய்விட்டேன்! முக்கியமாகத் தேடிக்கொள்வதில், ஆசைப்பட்டே னில்லை. எத்தனையோகாலம் விருதாவாகக் கழிந்துவிட்டது! அந்தக் காலங்களா னடைந்த பயனொன்றுங் காணேன். சீ, சீ! இதென்னவாழ்வு? இனியேனுஞ் சாக்கிறதையாக விராவிட்டால் மோசமாக முடியும். அந்தோ! மாயையின் சாலமே சாலம்! மாயையின் சொரூபத்தைச் சிறிதேனுஞ் சிந்தித்து நோக்காது

அமமாயையிலே மயங்கி யுழன்றேன்! அம்மம்ம! மாயா போகம் எவ்வளவு ஆனந்தத்தை விளைத்துவந்தது! இவைகளையெல்லாம் உண்மையென் றல்லவோ நம்பியிருந்தேன. மாயை எனக்கு அன்னிய மென்றறிந்தும், அம்மாயையை நீங்கியிருக்க முடியவில்லையே. அல்லது, மாயையாகவே நானிருக்கின்றேனோ வெனில், மாயை யொன்றுண்டென்ன, அதன் காரியங்களா னன் வேறாக விளங்குகின்றேனே! ஆ, ஆ! இந்த மாயை செய்வது இந்திரசாலமேயாம்! இதினின்று மீண்டாலல்லவோ உய்தியுண்டாம். இம்மாயையினைக் கடப்ப தெவ்வணம்! மாயை கொடிது! கொடிது! மாயை யொழிந்தாலல்லது பிறவி யொழியாதே! மாயையா லன்றோ தேகம் இடிகளைபோ லிடிந்து விழுந்து களைந்து போகின்றது! அங்ஙனம் போவதற்கு முந்தியே யன்றோ நித்தியமான வொன்றைத் தேடிக்கொள்ள வேண்டும்! இம்மாயையினை நானே யொழித்துக் கொள்வதற்குச் சிறிதுங் கூடாதே! பிறரைக்கொண் டொழித்துக்கொள்ளலா மெனில், யாவரும் மாயா சகிதர்களாகவே காணப்படுகிறார்கள். அவர்களை நாடுவது குருடன் குருடனைத் தேடுவது போலாகும். மாயாரகிதனாயிருக்கிற வொருவனை யடுத்தாலன்றி யிது நீங்காது, நீஙகாது. அங்ஙன மிருப்பவன் யாவன்? ஓ! ஓ! அவன் பிறப்பிறப்பில்லாதவனாக வன்றோ விருக்க வேண்டும். அவ்வணம் விளங்குபவன் யாவன்? - அவன்சர்வ முக்ய ஹவிர்திர் வியங்களுக்கும் போக்தாவாகி தகராகாச மத்யகதனாக வினிது

பிரகாசிக்கும் பரசிவப்பிரபு ஒருவரேயாம். இது சத்தியம், சத்தியம், சத்தியம். அப்பரமன் றிருவடியினையே சரணமென் றடைந் துய்வதுதான் மேலான நலம். அந்தோ! இதுகாறு நினையாது கெட்டேன்! கெட்டேன்!" என்று திடீரெனச் சிங் காதனத்தினின்றுங் கீழே குதித்துச் சத்திய லோகத்தைத் தணந்து, ஊழிதோறேருங்குங் கயிலாயகிரி யடைந்து, அவ் விடத்தில், பிருங்கியே முதலிய பதினெண் கணங்களும பண் பொடு சூழவே கண்ணுதற் பெருமான் கருணையோ டிலகுங் ககனந்தொட்ட கனக வாலயமும், அவ்வாலயத்தின் றிருவா யலிலே யினித்மருந் தண்டுழாயலங்கலாதிப் பலவகை மண மருவித்தரா எண்டிசை மணக்கு மெழிலுடை வேத்திர நற் படையினையை நலம் பெறத்தாங்கிய சிலாதரமுனி நயந்தளி த்ததோர் மகவாஞ் சிவம் பெற வந்த திருநந்தி தேவும இருக் கக்கண்டு பிரமன, அந்நந்தியெம்பெருமான் றிருவடிகளை வணங்கி விடை பெற்றுத் திருக்கோயிலுள்ளே சென்றான். அவ்விடத்தில், நாரணன் முதலிய தேவர்கள் நலம் பெறத துதிக்கவும், கணநாதர்கள் சவரி விரட்டவும், கிம்புருஷ காந்தருவ ராதிகள் கீதங்கள் பாடவும், அட்ட வித்தியேசுரார் அட்டமங்கலந் தாங்கவும், முனிவரரனேகர் அரஅர சிவ சிவ வென்றடி போற்றவும், அரம்பையாதியர் ஆடிப்பாடவும், சிவயோகிகள் சிவானந்த மேவவும், திருவருண் மழை பொ ழியவும் பச்சிளங் கொடியாகிய பார்வதி தேவியாருடன் எழு ந்தருளி யிருக்கும் செம்பளவம்போற் சிவந்து விளங்கும்

சடாமுடியையுடைய சந்திர சேகரனைத் தன்னிருநான்கு கண்களுங் களிப்பக்கண்டு, அஷ்டாங்க பஞ்சாங்கமாகப் பணிந்து, வந்தனை வழிபாடியற்றி, "ஈரிரு முனிவர் இன்பொடு தேற இரும் பெருஞானம் இசைவுடன் சொன்ன வித்தக முதல்வ! வினையேன பரிபவமிங் கூறுவன் கேண்மோ" வெனக் கைகூப்பி அதிவினையத்துடன் சொல்லுவானாயினன் வாணிகேள்வன்.

"தவள நிறமணிந்த தண்ணளியுடையோய்! துன்பத்திற கேதுவாகிய வெனது சிருட்டித் தொழிலில் அடியேனுக்கு அணுவளவாயினு மாசையில்லை. விட்டுணு வாதி பெரியோர்கள் வியன்பதவியிலும் விருப்பமில்லை. தத்துவநிலை புணர்ந்து சதானந்த முத்தியடைவதற்கே முழு ஆவலுடையவனாயிருக்கின்றேன்" என்று கதறிப் பதறி யழுதனன். அவன் பக்குவத்தினைப் பார்த்துக் கைலாயபதி, "கேளாய் பிரமனே, நீ கொண்ட வெண்ண மிக வுத்தமமானதே. அம்முத்தி நிலைக்குத் தவநிலையே சாதனமாம், அத்தவநிலை சிவதலங்களிற் செய்யின் சீக்கிரம் பலனுண்டாம; போக போக்கியங்களைக் கொடுக்குந் தானத்தாலும் தருமத்தாலும் கிடைப்பதன்று. ஆகலின், கடல் சூழ்ந்த வுலகத்திற் சத்த புரங்களி லொன்றான காஞ்சிமா நகரத்திற்கு வடகிழக்கில், விருத்த க்ஷீரநதி தீரத்திலுள்ள வலிதாயத்தை யடைந்து, தவமுஞற்றி வருவாயாயின் உன்னிஷ்டஞ் சித்தியாகும்" எனத் திருவாய் மலர்ந்தருளினர்.

பின், நாரணனுந்திவந்தோனாகிய நளின மலர் வாசியாம் பிதாமகன பெருமானிடத்தில் விடைபெற்றுக் குடிலையோர் வடிவினை நிகரெனக் காட்டுங் கொன்றைமாமலர் மணம் எங்கணும் வீசும் விண்டொடு மதில்சூழ் வலிதாயமதடைந்து, அவணுறும் ஆலயத்திற்கு மேற்றிசையின்கண் தன பெயராலோர் தீர்த்தமுண்டாக்கி, நீராடித் தேன்றுளிக்கும் நிழலில் வீற்றிருந்தருளும் வலிதாய நாதரைத்துதித்து, அன்பு மிகுந்த அருச்சனை செய்து, அருந்தவஞ் செய்யச் சங்கற்பித்துப் பவரோக நிர்மூல வருமருந்தாகிய திருநீறு பூசி உருத்திராக்ஷ மாலை தரித்து, சந்திரசேகரப்பெருமானுக்குரிய சதவுருத்திர மந்திரத்தைச் செபித்துக் கனி பட்சணம், சருகு பட்சணம், சலபட்சணம், வாயுபட்சணம் செய்பவனாகி, மோட்ச விதாய மாகிய பஞ்சாட்சரத்தினைக் கணித்து, இதயாரவிந்தத்தி னடுவிலே அம்மையப்பனை யமர்ந்தருள வைத்துப் பஞ்சாக்கினி மத்தியினின்று அகோரமான அருந்தவமுஞற்றுவானாயினான்.

இவ்வாறு நெடுங்காலங் கமலவேந்தன் கடுந் தவஞ்செய்துகொண்டிருக்கையில், திரிநேத்ர தாரியாகிய சிவபெருமான் இலிங்கத்தினின்று மாவிர்ப்பவித்துக் காட்சிகொடுத்தருளினர். நான்முகன்றனான்கிறு கண்களு நலம்பெறத் தரிசித்து, அருட்பெருங்கடலே, அமுதசாகரமே அடியேனை யாண்டருளும், அனாதி மலமுத்தனே! ஆணவத்தா லழிந்தேன், மாயாரகிதனே! மாயையால் மயங்கினேன், காமனை யெரித்தோய்!

காமத்தாற் கலங்கினேன், சிவனே! சிவனே ! இனி யுன்பாதமே கதி; இனி யெக்காலத்தும் பிறவாத வரமும், இந்தத்தீர்த்தம் பிர்மதீர்த்தமெனவும், இத்தலம் பிர்மபுரி யெனவும், வழங்கி வரவும் கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அருட்பெரும் வள்ளலா மரவினஞ்சுண்டோன். அவ்வரங்களுடன் அயனுர்க்குச் சிவகணங்களுக்குத் தலைவனுகு முயர்பதவியையுங் கொடுத்தருளிச் சோதிலிங்கத்திற் கரந்தருளினுர்.

பிரமன் முத்தியடைந்த சருக்க முற்றிற்று.

திருவிழாச்சருக்கம்.

சிவஞ்சாக்கிரநாவினர்களே ! காவேரி நதியினைத் தனக்கங்கமாகவுடையு பொன்னிநாட்டினை யரசாட்சி செய்து வந்த விக்கிரமச் சோழனென்னும் அரசனது சபையில் ஓர் நாள் வைதிக சைவ சித்தாந்தச் செல்வராகிய ஓர் சிவனடியரெழுந்தருளினர். அரசன் அவ்வடியாரைத் தரிசித்தவுடன் எழுந்து வணங்கி விபூதி யேற்று உபசரித்துச் சொல்லுவானுயினுன் சுவாமீ! அடியேன் அநந்த கல்யாண குணபரிபூரணரான சிவபெருமான் திருவருளால் பொன்னுலகத் திந்திரனைக் காட்டிலும் மிக்கச் செல்வத்தினை யனுபவித்து வருகிறேன. அங்ஙனமிருந்தும், புத்திரப்பேறென்றின்மையினு லுண்டாயிருக்குஞ் சஞ்சலம் அதிகமாயென்னை வாட்டுகின்றது. அல்லும் பகலும் நித்

திரையின்றி யேங்குகின்றேன். தேவரீர் தயைபுரிந்து ஏழை யேன் கவலை நீங்கும் வண்ணம் ஒரு சூட்சி சொல்லவேண்டு மென்று இரந்தனன். சிவனடியார் அரசனை நோக்கி, "ஐய! இதோ என்பால் புண்ணிய ரூபமான 'க்ஷேத்திரக் கோவை' என்னு மோர்நூலிருக்கின்றது. இன்று சோமவாரமா யிருத்தலின் இதனை யன்புடனே பூசித்துக்கயறு சாத்திப்பார்ப்பையேல், அதி லெந்தப்புண்ணியத்தலங் காணப்படுகிறதோ, அத்தலத்திற்குச்சென்று அங்கெழுந்தருளியிருக்கும் உமார்த்த சரீரத் திவ்ய மங்கள விக்ரகத்தினைப் பூசிப்பையேல் புத்திரப்பேறுண் டாம் என்றனர். அங்ஙனமே அரசன் கயறு சாத்தலும் 'திருவலிதாய க்ஷேத்திரம்' வரக்கண்டு அளவிலா மகிழ்ச்சியடைந்து, அத்தலத்தினை யிப்போதே தரிசிக்க வேண்டுமென்று பேராசையுற்றுத் தன தரசினை யமைச்சர்பா லொப்புவித்துத் தனதுகற்பினிற்சிறந்த மனைவியுடன் வெளிப்பட்டுத்திருவலிதாயத்தினையடைந்து, தீர்த்தமாடி ஆலயத்துட்சென்று சிவார்ச்சனை புரிந்து, கண்குளிரத்தரிசித்துத் துதித்து வணங்கி அப்பாற் போந்து உலகமாதாவாகிய தாயம்மையைப் பூசித்துக் குறையிரந்து நிற்க, அம்மையார் திருவுளமிரங்கிப் புத்திர சந்தானமுண்டாகும்படி வரந் தந்தருளினர். அவ்வரம் பெற்றவரசன் மனமகிழ்ந்து மீட்டும் வணங்கி விடைபெற்றுப் புறம்போந்து ஓராண்டளவும் சிவபுண்ணியங்களைச் செய்துகொண்டிருந்து மதில்கள், மண்டபங்கள், கோபுரங்கள், மடவளாகங்கள், மாடவீதிகள் உண்டாக்கிப் பின்னரொருநாள் திருவிழாநடத்தத்

தொடங்கினன். அரசன் கட்டளைப்படி ஆதிசைவர்கள் எண்ணி றந்த திருவாபரணங்களையும் பீதாம்பரங்களையும் பெருமானுக் கு அணிந்தனர். எங்கணுந் தோரண நாட்டினர். நவரத்தின மிழைத்த தம்பங்களில் வாழை கமுக முதலியவை கட்டினர். பூப்பந்தர்கள் சந்திகளிற் றூக்கினர். வீதிகளிற் கோலமிட் டனர். சித்திரை மாதத்திற் பூர்வ பக்கத்தில் புனர்பூச நட் சத்திரத்தில் கொடியேற்றிப் பல விழாவாற்றி, முதனாள் முதல் பத்துத்தினங்கள் வரையில் பலபல வாகனங்களிலே றறி ஆனைமுகன் ஆறுமுகன் சண்டேசன் அம்மையாருடன் அரனுருக்குத் திருவிழா வாரம்பித்து, காலையில் வீதிவலம் வந்தபின்னர், இரவில் மறையவர் வேதபாராயணஞ் சொல் லவும், குங்கிலிய தூபமெங்கும் வீசவும், அடியார்கள் நாமா வளி கூறவும், வெண்குடை நிழற்செய்யக் கவரி ஆலவட்டம் சாந்தாற்றி நெருங்கவும், கொடிகள் தாங்கவும், எள் விழுதற் கிடமின்றிப் பலர் சூழ்ந்தனர். சூரியன் சந்திரன் நட்சத்தி ரம் யானை சிங்கம் போன்ற சிவர்த்திகள் முன்னும் பின்னு மேந்த, பேரிகையாழ், சைப்படகம், பறை, முரசு, குடமு ழவு, சின்னம், பூரி, எக்காளம், சங்கம், தாளம், தண்ணுமை முழங்கவும் வெளிவந்தனர், வீதிதோறுங் கும்ப மமைத்த னர். வேதியர்கள் அட்டமங்கலத்துடனே தட்டுக்களில் தேங் காய் தாம்பூலம் காசு கற்பூரத்துடனே வந்து தீபாராதனை செய்யவும், சில வடியா ராடவும், சில வடியார் பாடவும், அரி யயற்கரியோன் வந்தான், அன்பருக்கெளியான் வந்தான்,

இருக்கினிலிருப்போன் வந்தான், மறையினில் மறைந்தோன் வந்தான், வலிதாய நாதன் வந்தான், தாயம்மைத்தலைவன் வந்தான் என்று தோத்திரிக்கவும், இத்தகைய ஆடம்பரத்துடன் மாடவீதி வலம்வந்து தூலலிங்கமாகிய கோபுரவாயிலையடைந்தவுடன், ஆதிசைவர் நிவேதனத்துடன் தீபாராதனைக்காட்ட, உருத்திரகணிகைகள் தாளவிசை மருவிய நடனமூடன் ஆலத்திசுழற்றி எச்சரிக்கை சோபனம பாடினார், நந்தியெம்பெருமான் முன்னேக ஆலயத்துட் பிரவேசித்துப் பெருமானெழுந்தருளினன். இவ்வகையாகப் பத்துத்தினங்களும் பல வாகனம் பல விமானத் தேர் முதலிய மீதிற் கொண்டாடித் தீர்த்தமாடி, அடுத்தநாள் மவுனபலிதூவி, பிற பூசையுஞ்செய்து இடபக்கொடியை யிறக்கினர். அரசன் இத் திருவிழாக்களில் அனேக பூதானம், சுவர்னதானம், அன்னதான முதலியசெய்து திருவலிதாய நாதனைத்தரிசித்து விடைபெற்றுக்கொண்டு தனது நகரத்தினையடைந்து, புத்திரப் பௌத்திரர்களை வாய்ந்து, தெய்வங்கட்குத் தெய்வமாகிய திருவலிதாயநாதனது சலியாணசுந்தர முதலிய குணங்களையே சிந்தனைசெய்து கொண்டிருந்து சுகமாக வாழ்ந்து வந்தனன்.

திருவிழாச்சருக்க முற்றிற்று.

தீர்த்த மகிமைச் சருக்கம்.

பரத்துவாச தீர்த்தம்.

மனமடங்கப் பெற்ற மாதவர்களே! மும்மலங்களையும் போக்கி முத்தி செல்வங் கொடுத்தருளுந் திருவலிதாயத்துச் சிவாலயத்தின் றென்றிசையிலுள்ள பரத்துவாச தீர்த்தத்தில ஸ்நானஞ் செய்யப்பெறறோர் புண்ணியத்தை யடைவார்களென்பதிற சந்தேக மில்லை. அத்தடாகத்திலேயே சூரிய வெப்பத்தா லொருகாலத்தில தண்ணீரில்லா விடினும், வேறு சலங்கொண்டு வந்து அவ்விடத்தில் விட்டுப், பின அத்தீர்த்தத்தை யெடுத்து உட்கொள்ளினும், சிரசின் மேற் பரோட்சித்துக் கொள்ளினும் உலவாவரும் பெருமணி பொன்னிதியையும், போக முப்போதும் விளையுநன் னிலங்களையும், நற்குண நற்செயலுறு நன் மனைவியையும், நல்லறிவுடையசோர் நன மக்களையும், பௌவமதகற்றும் பல்கலை ஞானத்தையு முத்தியையும் பெறுவர். அத்தீர்க்தத்தில் விருச்சிக மாதத்திலே சோமவாரத்தில் சூரியோதயமாகும், போது ஸ்நானம் செய்பவர் பின்னோர் பொழுது பிறவிக்கடலில் மூழ்கார். அத்தீர்த்தத்தில் அமாவாசையில் தத்தம் பிதுர்க்களுக்குத் தருப்பண மொருவன் செய்வானாயின், அவன் பிதுர்க்கள் கண்ணுதலுறையுங் கயிலாய மதடைந்து நித்தியானந்த பரசுக மெய்தபெற்றுய்வ ரென்றறிவீர்.

அனுமத் தீர்த்தம்.

பற்றற்று விளங்கும் பரம ஞானிகாள்! இகபர சுகங்களைக் கொடுக்கும் வலிதாய நாதனாகிய சிவபிரான் திருக்கோலங்கொண்டெழுந்தருளிய ஆலயத்தின் குணதிசையிலுள்ள அனுமதீர்த்தக்கரையிலிருந்து சற்பாத்திரமாயுள்ள சிவனடியாரொருவருக்கு ஓர் கவள அன்னமேனும் இடுவானாயின், அவனெக்காலத்தும் வெள்ளியங்கிரியை விட்டு நீங்காத நல்வாழ்வு பெறுவான். மகா பாவிகளாயினும், இழிந்த குலத்திற் பிறந்தவர்களாயினும் இந்தத் தீர்த்தத்தில் அடைவுடன் ஆடப்பெற்றவர்கள். அவர்கள் குற்றங்களினின்றுங் கரையேறுவதன்றி, அறம் பொருளின்பம் வீடெனப்பகரும் புருடார்த்த நானகினையும் பெறுவர்.

பிரம தீர்த்தம்.

தத்துவ ஞானத்தபசிகளே! மலிதரு பிறவித்துயர் தனைப் போக்கி மாண்பெறு முத்தி யின்பத்தைக் கொடுக்கும் திருவலிதாயத்தின் குடதிசையில் பிரம தீர்த்த மொன்றுளது. அத்தடாகக்கரையில உத்திராயண தட்சிணாயனங்களிலும், சூரிய சந்திர கிரணங்களிலும், அமாவாசை பருவங்களிலும், விதி பார்த்திம மாதப்பிரவேசங்களிலும், மாலிய பட்சத்தும் மற்றைய புண்ணிய காலங்களிலும் சிரார்த்தஞ் செய்யின அந்த புண்ணியத்தினுக்களவே கிடையாது. அன்றியும், இரத்தினங்களேனும், பொன்னேனும், பூஷணமேனும், வஸ்திரமேனும், பொருளேனும் இந்தத் தீர்த்தக்கரையிற் சிவனடியார்

களுக்குத் தானஞ்செய்யின், இம்மையிற் பெருகுஞ் செல்வத்துடன் வாழ்ந்து, பின்னர் மறுமையிற் கிடைக்குஞ் சிவானந்த சாகரத்தின் மூழ்குவர்.

பாச வைராக்கியப் பாக்கிய வான்களே! மணமது மருவிய பூவிணர் விழுமணி மலர்ச்சோலை பாங்குடன் சூழ்ந்த விப்பிரம தீர்த்தத்தினைப் யடுத்துப்புகழ் பெற்றோங்கும் அகத்திய தீர்த்த மொன்றுளது, காண்பீர். இதில் படிந்தவர்கட்கே யல்லாமல், இந்நீரினை அநநிய தேயங்களுக்கு ஒழுக்கத்துடன் கொண்டு போய் அனபுடன் முழுகு வோர்க்கும் மிக்க புண்ணிய முண்டாகும். இவ்வரிய தீர்த்தத்தின் உதவியால் முளைக்கும் புற்கொடி மர மாதிய வசேதனப் பொருளும் மோட்ச மடையுமெனில், இகபர சாதனங்களை நன்குணரும் சேதனராகிய மானுடர்கள் வீடடை வரென்பது அதிசயமாமோ! கூறுவீர்.

முத்தி செல்வத்திற்குரிய முனிவர்காள்! திருவலிதாய மாகிய பிரமபுரியை யடுத்த விருத்தக்ஷீர நதியினீரிலே ஏலம் இலவங்கம், விலாமிச்சு முதலிய வாசனைதிரவியங்களைக் கலந்து நூறுகுடங்கொண்டு வலிதாயநாதனுக்கு மகாபிடேகஞ்செய்பவர் கல்வியறிவில்லாதவர் கல்வியறிவெய்தப் பெறுவர்; பொருளில்லாதவர் பொருள்கிடைக்கப் பெறுவர்; இடமில்லாதவர் இடமணுகப்பெறுவர்; விவாகமில்லாதவர் விவாகங்கூடப்பெறுவர்; புத்திரப்பேறில்லாதவர் புத்திரப்பேறெய்தப்பெறுவர்; ஆயுளில்லாதவர் தீர்க்காயு ளடையப்பெறுவர்; இதுமுதலாகிய வைஸ்வரியங்கள் பலவும் யினி

தடைந்துய்ந்து, பின் திருக்கயிலாயஞ்சேர்ந்து சிவசொரூப முற்றுப் பேரின்பமெய்தப் பெறுவர்.

நஞ்சமர் நீல கண்டனுக்குகந்த நைமிசாரணிய மாதவ முனிவீர்! பிரணவாகாரமாகிய பூக்கள் நிறையப்பெற்ற கொன்றைமரத்தி னிழலிலே, தாயம்மை சமேதரா யெழுந்தருளியிருக்கும் வலிதாயநாதரின் சிறப்புப்பொருந்திய மானமியதனை, நாஞ்செய்த முற்றவப்பயனாலின்று ஓதவுங் கேட்வும்பெற்றோம். நாஞ்செய்த தவமனறோதவம்! இம்மானியத்தினைத் தத்தம் வீடுகளில் சோமவார முதலிய புண்ணிய தினங்களில் அன்பினுடனே படிப்பவரும், அதனைக்கேட்போரும், இம்மையிலே தாம்விரும்பிய புத்திர பௌத்திர களத்திராதிகளுடனே சகல வைஸ்வரியம் பெறவாழ்ந்து, மறுமையிலே சிவபெருமானது திருவடிநிழலில் வீற்றிருந்து பரமானந்த சுகம்பெறுவ ரிது சத்தியமென்று கூறியருளினர் நறகுதமாமுனிவர். சுபம்.

தீர்த்தமகிமைச்சருக்கம் முற்றிற்று.

வாழி.

போற்றிடுநற கொன்றைமூ லத்தொளிரும் வலிதாயப் புனிதன் வாழ்க, சாற்றரிய கருணையுரு வாகியெழுந் தாயம்மை சால வாழ்க, வேற்றதிரு நீறுமணி யைம்பதமிவ் வுலகமெலா மிலங்கி வாழ்க, தேற்றிடுவை தீகசித் தாநதசை வப்பேறே சிறந்து வாழ்க.

திருவலிதாயப்புராண முற்றிற்று.